# பொருத்தமான பாடசாலை ஆரம்பத்திற்கான சரியான வழி





## 1 பாடசாலைக்குத் தயார்நிலை என்பதென்ன?

வெற்றியான கற்றலுக்குத் தேவையான சகல திறமைகளையும் பிள்ளை பெற்றிருந்தால் அது பாடசாலைக்குத் தயார் என்று கருதப்படுகிறது.



## 2 இந்தத் திறமைகள் எவை?

இத் திறமைகள் பல அதில் சில:

- உத்தரவிடும் கடமைகளை விளங்கிச் செய்தல் தனது சுயதேவைகளை விளக்கமாகத் தெரிவித்தல்
- கத்தரிக்கோல் எழுதுகோலைச் சரியாகப் பாவித்தல்
- பிள்ளைக்கு விருப்பமற்ற பயிற்சியாயினும் விடா முயற்சியைக் காட்டுதல்
- கிரகித்தல் இயலுமையைக் கொண்டிருத்தல்
- விதிமுறைகளைக் கடைப்பிடித்தல், சிறார்கள் குழுவில் குழப்பம் விளைவிக்காமல் இணைதல்



## 3 பாடசாலைக்குத் தயார்நிலை எப்போது பரிசோதிக்கப்படல் வேண்டும்?

தேவையான திறமைகளைப் பிள்ளை ஒரு பகுதி மட்டும் பெற்று அல்லது முற்றாகவோ பெறாது இருந்தால் பரிசோதிக்கப்படல் வேண்டும்.

## 4 பாடசாலைக்குத் தயார் நிலைப் பரிசோதனையை யார் நடத்துவார்கள்?

இதற்கு 2 பரிசோதனை நிலைகளில் ஒன்றைப் பெற்றோர் தெரிவு செய்யலாம்:

- பேர்ண் நகரின் ஆரோக்கியநிலையம் (பெண் / ஆண் பாடசாலை வைத்தியர்)
- பேர்ண் மாநிலத்தின் கல்விவளர்ப்பு ஆலோசனை நிலையம் (பெண் / ஆண் பாடசாலை உளவியலாளர்)

Gesundheitsdienst Stadt Bern
Direktion für Bildung
Soziales und Sport

## 5 என்ன விடயங்களைப் பாடசாலைக்குத் தயார் நிலைப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது ?

- பரிசோதிப்பவர் பிள்ளையின் வளர்ச்சி முறை, பெற்றோர் மற்றும் பாலர்வகுப்பாசிரியரின் அவதானிப்புகளைக் கருத்தெடுப்பார்.
- பிள்ளையின் திறமைகளை விளையாட்டுக் கலந்த பயிற்சிகளினூடாகப் பரிசோதிப்பார்.
- பயிற்சி முடிவுகளையும் பாடசாலை ஆரம்பத்திற்கு ஏற்ற வழிமுறைகளையும் பெற்றோருடன் கலந்துரையாடுவார்.

Gesundheitsdienst Stadt Bern
Direktion für Bildung
Soziales und Sport

## 6 நடைமுறையும் காலமும்

- பாடசாலைத் தயார் நிலைபற்றி பாலர்வகுப்பாசிரியர் பெற்றோருடன் கலந்துரையாடுவார்.
- தேவைப்பட்டால், பெற்றோரும் அனுமதித்தால் பிள்ளையை பரிசோதனைக்காக 28. பெப்ரவரிக்கு முன் விண்ணப்பிப்பார்.
- மார்ச் / ஏப்பிரல் மாதத்தில் பரிசோதனை குறிப்பிட்ட நிலையத்தால் நடத்தப்படும்.
- கோடை ஆரம்பத்தில் பாடசாலை நிர்வாகி வகுப்பு ஒழுங்குகளைப் பெற்றோருக்கு அறிவிப்பார்.

Gesundheitsdienst Stadt Bern
Direktion für Bildung
Soziales und Sport

## 7 பிள்ளை கற்க ஆரம்பித்தலுக்கான முறைகள்

- பாடசாலைக்கு முழுமையாகத் தயாரான பிள்ளை 1ம் வகுப்புப் பாடத்தை ஒரு வருடத்தில் படிக்கும்.
- ஒரு பகுதி தயாரான பிள்ளைக்கு நேரமும் விசேட உதவிகளும் அதிகம் தேவை. இது 1ம் வகுப்புப் பாடத்தை இரு வருடங்களில் (ஒரு வருடமாகக் கணிப்பிடப்படும்) படிக்கும். பிள்ளை தனக்கேற்ற வேகத்தில் படித்து வெற்றிஅனுபவங்களைப் பெறும்.
- பாடசாலைக்குத் தயாரற்ற பிள்ளை இன்னொரு வருடம் பாலர்வகுப்பில் படிக்கும்.